வடமத்திய மாகாண சபை 2024 ஆண்டு

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடமத்திய மாகாண சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினது தகவல்கள் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிலான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வடமத்திய மாகாண பிரதான செயலாளரின் 2024 திசெம்பர் 31 திகதிய 2024/16 கொண்ட மாகாண திறைசேரி சுற்றறிக்கையின் 2.1 பிரிவின் பிரகாரம் PTRBK நிகழ்ச்சிதிட்டத்தின் மூலம் உருவாகும் விரிவான பரீட்சை மீதியை நிதிக்குற்றுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய போதும், மாகாண சபையின் 20 நிதிகூற்றுக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிதிகூற்றுக்கள் 10 உடன் விரிவான பரீட்சை மீதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	திறைசேரி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுகள் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்
(ஆ)	மீளாய்வாண்டில் திசெசம்பர் 31 திகதிக்கு வடமத்திய மாகாண சபையில் நிதிநிலைமை மீதான கூற்றில் உள்ளடங்கிய 08 நடைமுறை அல்லாத சொத்து வகைகளின் பெறுமதி மற்றும் அமைச்சு மற்றும் திணைக்களங்களில் நிதிக்கூற்றுகளில் உள்ளடங்கியுள்ள	எதிர்காலத்தில் இந்த தவறுகளை சரிசெய்ய தேவையான நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்ய வேண்டியதுடன், அனைத்து சொத்துக்கள், சொத்துக்கள் மென்பொருளிற்கு உட்படுத்த வேண்டும்.

	பெறுமதிக்கிடையில் ரூபா 3,469,072,942 ஆன வித்தியாசம் காணப்பட்டதுடன் ரூபா 18,810,045,165 பெறுமதியான நடைமுறை அல்லாத சொத்துக்கள் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் சொத்துக்கள் முகாமைத்துவ மென்பொருளுக்கு உள்ளீடு செய்திருக்கவில்லை.		
(இ)	மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிராந்திய அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் மூலம் வடமத்திய மாகாண சபைக்காக 2024 திசெம்பர் 26 திகதி விடுவித்திருந்த ரூபா 50,487,805 தொகையை முற்பணமாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி இனங்காணாத வைப்பொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இத் தொகை 2024 ஆண்டில் செலவிடப்பட்டது. 2025 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்கிறேன்.	மீளாய்வாண்டிற்குரிய செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஈ)	மாகாண சபைக்கு பெறுமதி ரூபா 1,848.4 மில்லியனான மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியம் கிடைத்திருந்ததுடன், அந்த முற்பண விடுவிப்புப் பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி 1,900.4 மில்லியனானதில் ரூபா 52 மில்லியனான வித்தியாசம் காணப்பட்டது.	பொது திறைசேரியில் இருந்து கிடைத்த முற்பணத் தொகைக்கு மேலதிகமாக மாகாண சபை நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளதால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது.	முற்பணம் விடுவிக்கும் போது பதிவேட்டை சரியாக தயாரிக்க வேண்டும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன

1 .5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

1.5.1 தலைப்பு 600 – ஆளுனர் செயலகம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	காட்டு யானை மற்றும் மனித பிரச்சினையைத் தீர்பது தொடர்பாக உததேசங்கள் செயற்படுத்துவதன் கீழ் மாகாண சபை ஊடாக வட மத்திய மாகாணத்தில் யானை வேலி பாதுகாக்க 81 காவல் கூடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 32,400,000 ஆன செலவு மேற்கொண்ட போதும் அந்த கடமையை செய்வதற்கு முன்னர் சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொள்ளாததால் எதிர்ப்பார்த்த நோக்கங்களை நிறைவேற்ற முடியாமலிருந்தது. அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மற்றும் காலத்திற்கு காலம் நிலைமைகளை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்காததன் மீது அந் செயற்த்திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் மற்றும் பின்னர் உயிர் சேதங்கள், பயிர் சேதங்கள் இடம் பெற்றிருந்தது.	செயற்த்திட்ட மேற்பார்வை நடவடிக்கை மாகாண விவசாய செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.	எதிர்ப்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளதா என பின்தொடர் நடவடிக்கை செய்ய வேண்டும்.
(ஆ)	2021 செப்டம்பர் 29 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 2.1, 2.2, 2.3, 2.4, 2.5 பந்திகள் பிரகாரம் மாகாண சபை நிதிஏற்பாடு மூலம் நிர்மாண செயற்திட்டங்கள் மேற்கொள்ளும் போது பிரதி பிரதான செயலாளர் (பொறியியல்) அலுவலகம் ஊடாக நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு பதிலாக மீளாய்வாண்டின் ஹிங்குரக்கொட பிரதேச செயலக அலுவலகம் மற்றும் எலஹெர பிரதேச செயலக அலுவலகங்களினால் ஒரு சங்கத்திற்கு 05 ஒப்பந்தங்கள் வீதம் ஒரே தடவையில் வழங்கப்படடிருந்ததுடன் மெதிரிகிரிய பிரதேச செயலக அலுவலகத்தினால் அதிகார பிரதேசத்தில் இல்லாத	உரிய பிரதேச செயலாளரிற்கு இந்த ஐயவினா அனுப்பப்பட வேண்டுமென.	பிரதி பிரதான செயலாளர்(பொறிய ியல்) மூலம் நிர்மாணங்கள் மேற்பார்வையின் கீழ் ஒப்பந்தங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே சமுதாய அடிப்படை அமைப்பொன்றிற்கு 03 ஒப்பந்தங்களை விட ஒரே தடவையில் வழங்க கூடாததுடன், மாகாண சபை நிதியமாகையால் சுற்றறிக்கை

	விவசாய அமைப்பொன்றிற்கு 10 ஒப்பந்தங்கள் ஒரே தடவையில் வழங்கி நிர்மாண பணிகள் மேற்கொள்வதன் மூலம் நிர்மாணங்கள் மேற்பார்வை மற்றும் நிர்மாணங்களின் தரத்தை தெடர்பான பிரச்சினைகள் எற்பட்டிருந்தது.		பிரகாரம் பணிகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

1.5.2 தலைப்பு 602 - மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் 21 பதவிகளிற்காக ஆண்டிற்கு இருமுறை வினைத்திறன் தடைகான் பரீட்சை நடாத்த வேண்டிய போதும், 2024 ஆண்டில் ஒரு முறை மாத்திரம் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தது. 2024 ஆண்டிற்குரியதாக இலங்கை பரீட்சை திணைக்களத்தின் மூலம் நடாத்த எதிர்கார்க்கும் 03 வினைத்திறன் தடைகான் பரீட்சைகளை நடாத்தி இருக்கவில்லை.	வினைத்திறன் தடைகான் பரீட்சை 2024 ஆண்டிற்காக ஒரு முறை மாத்திரம் நடைபெற நேர்ந்தது.	உரிய காங்களினுள் வினைத்திறன் தடைகான் பரீட்சை நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	வடமத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் 2017 செப்டம்பர் 25 திகதி நியமனம் வழங்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் 3 I(ஆ) தரத்திற்கு வழங்கிய ஆசிரியர் நியமனங்களிற்கு இடையே 02 ஆசிரியர் நியமனங்களிற்காக நேர்முகப் பரீட்சையின் போது தகைமையற்ற விண்ணப்பதாரர்களாக நிராகரிக்கப்பட்ட இரண்டு விண்ணப்பதாரர்களிற்கு நியமனம் வழங்கியுள்ளமை தொர்பாக புலனாய்வு செய்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஆரம்ப புலனாய்வு அறக்கை பிரகாரம் முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கறேன்.	தகைமை பெறப்படாத அவர்களிற்கு நியமனம் வழங்கிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை விரைவில் எடுக்க வெண்டும்.

(இ)	அநுராதபுர மாவட்டத்தில் 05 பாடசாலைகளிற்கு மற்றும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் சேவையில் இருந்த தகுதிகாண் காலம் நீடிக்கப்பட்டிருக்காத எனினும் பல காரணங்களால் தகுதிகாண் காலத்தில் சேவையை நிறைவு செய்ய இயலுமை காணப்பட்ட 07 உத்தியோகத்தர்களின் சேவையை நிறைவு செய்ய 08 ஆண்டுகளிற்கும; 25 ஆண்டுகளிற்கு இடையிலான காலம் கடந்திருந்தது.	பதல் வழங்கப்படவில்லை.	சேவையில் நிரந்தரமாக்க முன்னர் தகது காண் கலப்பகுதினள் உத்தியோகத்தரின் ஆரம்ப தகைமையை பரீட்சிக்க வேண்டும்.

1.5.3 தலைப்பு 610 - பிரதம அமைச்சு மற்றும் வடமத்திய மாகாண சட்டம் மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விசேட செயற்திட்டங்கள், சுற்றுலா, கல்வி, தகவல் தொழிநுட்பம், பொறியியல் நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
வடமத்திய மாகாண பிரதான அமைச்சினால் பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய மதியுரை பணியகத்துடன் 2021 ஆண்டிற்கு முந்திய காலத்தில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் பிரகாரம் நகர பாதை அபிவிருத்தி செயற்திட்டமொன்றின் வேலை ஆரம்பிக்கப்பட்டு இருந்ததுடன், அந்த செயற்திட்டத்திற்காக பிரதான அமைச்சினால் அந்த நிறுவனத்திற்கு முற்பண காப்பின்றி வழங்கிய ரூபா 128,316,501 ஆன முற்பணத்தை அறவிட பல ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை.	முற்பண செலவு விடயத்திற்கு செலவு வைத்து செலவொன்றாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.	பொறுப்பை புறக்கணித்துள்ள உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.4 வடமத்திய மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சந்தை தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை அல்லது மாகாண சபையின் நிதி மதியுரை குழுவின் ஆங்கீகாரமின்றி ஆரம்பித்திருந்த	சந்தை தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு புதிய செயற்திட்டத்தை	ஒழுங்கான சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு செயற்

	பாடசாலை புத்தக விற்பனை பிரிவிலிருந்து மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 2,411,352 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.	ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	திட்டத்தை ஆரம்பிப்பது பொருத்தமென உறுதி செய்து கொள்ளாது செயற்திட்டத்தை ஆரம்பிக்கக் கூடாது.
(ஆ)	நிறுவனத்தின் துணை செயற்திட்டம் ஒன்றாக நடாத்திச் செல்லும் மாகாண பாதுகாப்பு அலகு, பாதுகாப்பு அமைச்சின் தனிப்பட்ட பாதுகாப்பு பிரதி நிறுவனமொன்றாக பதிவு செய்திருக்கவில்லை.	இரண்டு வாரங்களினுள் பதிவு சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியுமென பாதுகாப்பு அமைச்சினால் வாய்மொழி மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.	பாதுகாப்ப அமைச்சில் பதிவு செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	அச்சிற்கு தேவையான கடதாசி (60 GSM blank paper (24”x34”) மீளாய்வாண்டினுள் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 24,755,195 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த ஒவ்வொரு சந்தர்ப்த்திலும் வழங்குனரை தெரிவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்வி வலை மதிப்பீட்டின் போது முரண்பாடன பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதும் அந்த பரிந்துரைகள் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தற்போது பெறுகைகள் செயன்முறை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	இயந்திரவியல் பிரிவிற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 24,312,572 ஆன வாகன உதிரிப் பாகங்கள் சாதாரண பெறுகைகள் செயன்முறைக்கு புறம்பாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.	பெறுகைகள் செயன்முறையை ஒழுங்குபடுத்த வேண்டும்.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.5 ஆரம்ப குழந்தை பருவ அபிவிருத்தி அதிகாரசபை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அதிகார சபையின் நிர்வாக கட்டிட நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க முன்னர் கட்டிட திட்டத்தை அங்கீரித்துக் கொண்டிருக்காத காரணத்தால் அநுராதபுர மாநகர சபையினால் அந்த நிர்மாணத்தை இடைநிறுத்தி இருந்ததுடன் 2020 சனவரி 29 திகதி பிரதான அமைச்சின் செயலாளரினால் நியமித்த மூன்று	இது தொடர்பாக பிரதான அமைச்சின் மூலம் 03 மாதங்களிற்குள் விசாரணை ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.	அதிகார சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	நபர்கள் குழுவினால் தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரரினால் நிறுவனத்திற்கு ரூபா 3,812,085 செலுத்த வேண்டுமென பரிந்துரைத்திருந்த போதும் அத் தொகையை அறவிட பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஆ)	2013 நவம்பர் 14 திகதி முதல் 2015 மார்ச் 19 திகதி வரை அதிபார சபையின் முகாமைத்துவ பணிப்பாளராக பணியாற்றி நபர் ஒருவரினால் அந்த அதிகார சபையின் முன்பள்ளி ஆசிரியர்களின் 2014 ஒக்டோபர் மாத கொடுப்பனவுத் தொகையான ரூபா 900,000 தொகையை பெற்றுக் கொண்டு அதனை தனது தனிப்பட்ட பாவனைக்கு எடுத்தமை மற்றும் அதிகார சபைக்கு சொந்தமான ரூபா 285,250 பெறுமதியான உபகரண இருப்பொன்றை அதிகார சபைக்கு ஒப்படைக்காதமை தொடர்பாக முறையான திணைக்கள விசாரணை ஒன்றை நடாத்தி நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறித்த கடித ஆவணங்கள் அதிகார சபையின் பொறுப்பில் இல்லாததால் திணைக்கள விசாரணை ஒன்றை மேற்கொள்ள இயலுமை இல்லையென அறவிக்கப்பட்டுள்ளது.	விசாரணை ஒன்றை மேற்கொண்டு நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.6 நூலக சேவைகள் சபை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 மார்ச் 08 ஆம் திகதி நடந்த வடமத்திய மாகாண நூலக சேவைகள் சபையின் 33 ஆம் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பதவிநிலை பத்திரம் 164/2023 இன் பிரகாரம் வாசிப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் நடாத்துவதற்காக ஆரம்ப பாடசாலைகளை தொடர்புபடுத்திக் கொண்டு வாசிப்பு முகாமை பொலொன்னறுவ மாவட்டத்தில் 10 நிகழ்ச்சித்த திட்டங்கள் மற்றும் அநுராதபுர மாவட்டத்தில் 10 நிகழ்ச்சித்த திட்டங்களை செயற்படுத்த பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்திருந்த போதும், பொலொன்னறுவ மாவட்டத்திற்கு 05 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டு இருந்தன.	நிலவிய வளங்கள் 05 முகாம்களை நடாத்த மாத்திரமே போதுமானதாக இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நிலவுகின்ற வளங்கள் பிரகாரம் பௌதீக ரீதியாக மேற்கொள்ள முடியுமான நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட வேண்டும்..
(ஆ)	விஞ்ஞாபனத்தின் 19(ஆ) பிரிவில் குறிப்பிடப்படுமாறு வட மத்திய நூலக சேவைகள் சபையினால் முடிவு செய்யும் நிதி அளவுகள், வட மத்திய மாகாண	எதிர்காலத்தில் விஞ்ஞாபனம் பிரகாரம் கடமைகளை மேற்கொள்ளுமாறு	விஞ்ஞாபனம் பிரகாரம் காணப்படும் நிதியை நோக்கத்தை அடைந்து கொள்ள

	அதிகார பிரதேசத்தில் நூலக மற்றும் தகவல் சேவைகள் அபிவிருத்திக்காக பயன்படுத்த முடியுமான போதும் மீளாய்வாண்டில் நிதியத்திலிருந்து அதற்காக எவ்வித கொடுப்பனவும் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	முகாமைத்துவ பணிப்பாளரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	ஆக்கபூர்வமாக ஈடுபடுத்த வேண்டும்.
(இ)	வட மத்திய நூலக சேவைகள் சபையை நிறுவுவதனால் அடைந்து கொள்ள எதிர்பாத்த நோக்கத்தை அடைந்து கொள்ள முயற்சி எடுக்காது நீண்ட காலமாக வருத்திற்கு வருடம் நிலையான வைப்பை புதிப்பித்து வட்டியுடன் ரூபா 2,860,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது.	ஒரு செய்ற்திட்டத்தை செயற்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது..	நிதியத்தை நிறுவியதன் நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.7 தலைப்பு 611 - உள்ளுராட்சி திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிராந்திய அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் கீழ் 07 உள்ளூராட்சி நிறுவனங்களில் 07 நிர்மாண செயற்திட்டங்களிற்கு உரியதா கொடுப்பனவு செய்யும் போது 03 செய்ற்திட்டங்களில் மேற்கொள்ளாத 27 வேலை அலகுகளிற்காக ரூபா 2,925,875 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 06 செயற்திட்டங்களிற்கு உரியதாக ரூபா 31,172,946 தொகை, மேலதிக வேலைகளாக மதிப்பீட்டு அளவை விஞ்சி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 03 செயற்திட்டங்களிற்காக ரூபா 15,938>324 தொகை விலை விலகளிற்காக செலுத்தி இருந்ததுடன், அந்த விலை விலகல் 21 சதவீதம் முதல் 35 சதவீதத்திற்கு இடையிலான வீதமொன்றானது. அவ்வாறே ரூபா 4,890,873 பெறுமதியான 41 உருப்படிகளிற்காக உத்தரவு சான்றிதழ் சமர்ப்பித்திருக்கா போதும் அதற்குரிய கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	மேலதிக வேலை, மதிப்பீட்டு அளவை விஞ்சியமை மற்றும் விலை விலகலிற்காக எதிர்காலத்தில் குறித்த அங்கீகாரத்தை உரியவாறு பெற்றுக் கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 18 உருப்படிகளிற்காக உத்தரவு சான்றிதழ் கிடைத்துள்ளது.	மதிப்பீடு தயாரிக்கும் போது மேலதிக வேலைகள் மற்றும் அளவுகளை விஞ்சுவதனை குறையும் வகையில் தயாரிக்க வேண்டியதுடன் குறித்த உத்தரவு சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	2024 ஆண்டில் பதவிய பிரதேச சபைக்காக கலிபவுசர் ஒன்றை கொள்வனவு செய்கையில் பெறுகைகள் வழகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்றாது விலைமனு கோரிய காரணத்தால் உரியவாறு பதில் வழங்கியிருந்த மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரந்துரைத்த மனுதாரரை அங்கீகரிக்காது பெறுகைகள் குழுவினால் மீண்டும் கேள்வி விலை கோர முடிவு செய்த காரணத்தால் டெக்டர் கலிபவுசரை கொள்வனவு செய்கையில் ரூபா 240,000 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.	கேள்வி விலை ஆவணங்களில் நிலவிய குறைபாடுகள் காரணமாக இந்த கேள்வி விலை கோரலை இரத்துச் செய்து மீண்டும் கோர வேண்டுமென தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் மீது பெறுகைகள் குழு தீர்மானித்துள்ளது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.8 தலைப்பு 612 - மாகாண கல்வித் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அ/கெபிதிகொல்லாவ ஆரம்ப வித்தியாலயத்தின் 90 x 25 இரண்டு மாடி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 10 சந்தர்ப்பங்களில் ரூபா 6,453,413 ஆன பெறுமதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் வடமத்திய மாகாண நிதி விதி கோவையின் விதி 164 மற்றும் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.1 மற்றும் 8.12.2 பிரகாரம் வேலை பூர்த்தி செய்யும் விசேட சான்றிதழை இதுவரை பெற்றிருக்கவில்லை.	இரண்டு மாடி கட்டிடத்தின் உரிய அளவுத்திட்டம் மற்றும் நிபந்தனைகளிற்கு இணங்க தயாரிக்கப்படவில்லை என மாகாண பொறியியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. எதிர்காலத்தில் இது தொடர்பான மேலதிக தகவல்களை வழங்க எதிர்பார்ப்பதென.	நிர்மாண வேலைகள் நிறைவடைந்திருப்பின் விசேட சான்றிதழை பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறின்றி இறுதி கொடுப்பனவை செய்யக் கூடாது.
(ஆ)	வடமத்திய மாகாண நிதி விதி கோவையின் விதி 177 பிரகாரம் கலென்பிதுனுவெவ மத்திய மகாவித்தியாலயத்தின் மற்றும் அ/கழுவிலசேன மகா வித்தியாலயத்தின் 2024 ஆண்டில் முறையே ரூபா 2,881,500 மற்றும் ரூபா 2,322,846 பெறுமதியான வவுசர்கள் உறுதி செய்யப்படாத கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	தற்போதைய அதிபரிற்கு குறித்த கடித ஆவணங்களை ஒப்படைத்தில்லாததால் பதில் வழங்க முடியாதென.	ஒவ்வொறு வவுசரிற்கும் கொடுப்பனவு செய்யும் போது குறித்த பொறுப்பான உத்தியோகத்தரினால் உறுதி செய்யப்பட்டுள்ளதா என பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.

(இ)	வடமத்திய மாகாண நிதி விதி கோவையின் விதி 189.3 பிரகாரம் கலென்பிதுனுவெவ மாதிரி ஆரம்ப வித்தியாலயத்தில் 2022 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை ரூபா 2,252,680 பெறுமதியான 16 வவுசர்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.	16 வவுசர்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என தெளிவாகின்றது.	கொடுப்பனவு வவுசர்களை கணக்காய்வினால் கோரும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
(ஈ)	2021 செப்படம்பர் 29 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 2.1, 2.2, 2.3, 2.4, 2.5 பந்தி பிரகாரம் ஹிங்குரங்கொட வலய கல்வி அலுவலகத்தினால் 2024 ஆண்டில் சமுதாய அடிப்படை சங்கங்களிற்கு ரூபா 45,056,867 ஆன ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு இருந்ததுடன் அவற்றில் ஒரு சங்கத்தின் அனுபவம் நிதி இயலுமை தொடர்பாக கவனத்திற் கொள்ளாது ரூபா 5 மில்லியனான 05 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.	2025 ஆண்டில் ஒப்பந்தங்களை வழங்கும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்ற நடவடிக்கை எடுப்பதென.	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.1 பந்தி பிரகாரம் ஒப்பந்த உடன்டிக்கை பிரகாரம் ஒப்படைக்கப்பட்ட பணிகளிற்காக துணை ஒப்பந்தம் வழங்கக் கூடாத போதும், மீளாய்வாண்டில் ரூபா 9,427,670 பெறுமதியான 03 ஒப்பந்தங்கள் 03 பாடசாலை அபிவிருத்தி சங்கங்களினால் துணை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.	அனைத்து அதிபர்களிற்கும் துணை ஒப்பந்தம் வழங்கக் கூடாதென எழுத்து மூலம் அறிவித்தனுப்ப நடவடிக்கை எடுத்ததென.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டில் நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் (GEMP) கீழ் கணித வள நிலையத்தின் வளிபதனாக்கியை பொருத்தும் போது, சந்தை விலைகள் பற்றி கவனம் செலுத்தாதன் காரணமாக சாதாரண சந்தை விலையை விட ரூபா 594,990 கூடுதல் தொகையை செலுத்தியிருந்ததுடன் வேலை விடயங்களை மாற்றியதன் காரணமாக ரூபா 773,643 கூடுதல் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.	பட்டியலில் குறிப்பிடப்படும் விலையை சந்தை விலையுடன் ஒப்பிட்டு கொடுப்பனவு செய்தாகவும் நிர்மாணப் பொருட்களின் விலைகளை அடிப்டையாகக் கொண்ணுடு அரசிற்கு தீங்கின்றியவாறு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் மற்றும் மாகாண நிதி விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(எ)	பொலொன்னரு மாவட்டத்தின் 03 வலையங்களிற்குரிய 495 பாடசாலைகளில் மலசலகூட வசதிகள் இல்லாததுடன், 1008 பாடசாலைகளில் மலசலகூடங்கள் திருத்தும் நிலையில் காணப்படுகின்றன. அவ்வாறே 92 பாடசாலைகளில் குடிநீர் தேவைப்பாட்டை நிறைவு செய்ய வேண்டிய போதும், பல ஆண்டுகளாக அந்த தேவைப்பாட்டை நிறைவு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பாடசாலைகளின் நீர்குழாய்த் தொகுதிகளின் திருத்த நடவடிக்கைகள் பிரதான அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	பாடசாலைகளிற்கு குடிநீர் வழங்கல் மற்றும் மலசலகூட திருத்தத்தை முன்னுரிமை பணிகளாக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஏ)	க.பொ.த.(சா.த) பரீட்சை பெறுபேறுகள் பிரகாரம் நாடடின் மொத்த மாகாணங்களிற்கு இடையே தொடர்ந்து 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் 9 ஆம் இடம் கிடைத்திருந்ததுடன், தேசிய மட்டத்தில் சராசரி மட்டத்தை விட வட மத்திய மாகாணத்தின் மொத்த பெறுபேறு கீழ் மட்டத்திலும் காணப்பட்டது. எனினும் அந் நிலையிலிருந்து மீள்வதற்காக மாகாணத்தை பரீட்சை பெறுபேறுகளை உயர்த்துவதற்கு பாடசாலை மட்டத்தில் வரவேற்கத் தக்க வேதைத் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை.	பரீட்சை பெறுபேறுகளை உயர்த்துவதற்கு மாகாண, வலைய, பாடசாலை மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்தப்பட்டன.	பெறுபேறுகளை உயர்த்துவதற்கு பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் விடய அறிவை மேம்படுத்தும் வரவேற்கத் தக்க வேலைத் திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்த வேண்டும்.
(ஐ)	மாகாணத்தில் 04 வலைய அலுவலகங்களில் 116 அதிபர் உத்தியோகபூர்வ இல்லங்களும் 500 ஆசிரியர் உத்தியோகபூர்வ இல்லங்களும் திருத்த நிலையிலும் இரு வகைகளிலும் 100 இல்லங்கள் அகற்ற வேண்டிய நிலையிலும் 238 இல்லங்கள் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டன.	பதில் வழங்கப்படவில்லை.	உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்தவும் குறை பயன்பாட்டு இல்லங்களை பயன்படுத்துவ தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.
(ஒ)	மாகாண கல்வி திணைக்களத்தறிகு உரிய 10 வாகனங்களிற்கு இடையே 06 வாகனங்கள், அநுராதபுர வலைய கல்வி அலுவகத்தில் உள்ள 04 மோடார் சைக்கில்கள் பல ஆண்டுகளாக ஓட்டத்திலிருந்து அகற்றியுள்ள போதும் மீளாய்வாண்டு இறுதி வரை அந்த வாகனங்களை திருத்த அல்லது பராதீனம் செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அந்த வாகனங்களின் பதிவு உரிமையாளர்களிடம் இருந்து பிரதான செயலாளர் வடமத்திய மாகாணத்தின் பெயரிற்கு சுவீகரித்தல் தாமதமானதன் காரணமாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பது தாமதித்துள்ளது.	தொழில்நுட்ப பரிந்துரையை பெற்று வாகனங்களை திருத்த அல்லது பராதீனம் செய்ய வேண்டும்.

(ஓ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அங்கீகார ஊழியர் எண்ணிக்கை பிரகாரம் மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் (கட்டுப்பாடு) பதவி, பிரதி கல்வி பணிப்பாளர் பதவி, 06 உதவி/பிரதி கல்வி பணிப்பாளர் பதவிகள் உள்ளடங்களாக 38 வெற்றிடங்கள் மற்றும் 08 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளில் மிகை காணப்பட்டதுடன் 02 சாரதி பதிவிகள் மற்றும் அலுவலக பணி உதவியாளர் பதவிகறிற்காக அமைய ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	கல்வி அமைச்சிற்கு இந்த வெற்றிடங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.	ஆட்சேர்க்க தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும்.
(ஔ)	மாகாணத்தில் மாகாண சபை பாடசாலைகளில் அதிபர் பதிவகளில் 323 வெற்றிடங்களும், 114 பிரதி அதிபர் பதிவிகளில் மிகையும், இரண்டாம் மட்ட 948 ஆசிரியர்களும், 51 முகாமைத்துவ உத்தியோகர்தர்களும், ஆய்வுகூட உதவியாளர், காவலர் உள்ளிட்ட ஆரம்ப மட்ட பதவிகளில் 66 வெற்றிடங்களும் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் 391 பதவிகள் மற்றும் பாடசாலை அலுவலக உதவியாளர் 50 பதவிகளும் மிகையும் ஆவதுடன் அங்கீகார ஆளணிக்குரித்தற்ற ஆரம்ப மட்ட ஆளணியில் 10 பேர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	குறித்த வெற்றிடங்கள் தொடர்பாக அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தை அறிவுருத்தியுள்ளதென.	அத்தியவசிய பதவிகளை நிரப்ப தேவைாயன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
(க)	மீளாய்வாண்டு இறுதியில் வடமத்திய மாகாண கல்வி திணைக்களத்திற்குரிய மாகாண சபை பாடசாலைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல விடயங்களில் ஆசிரிய வெற்றிடங்கள் 2,238 காணப்பட்டன..	காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களிற்காக ஆட்சேர்ப்பதற்குரிய வர்த்தமானி அறிவித்தலை தயாரித்து பிரதான அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.	தேவையான ஆட்சேர்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(கா)	உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறையின் பலவீனம் காரணமாக பாடசாலை தவணை பரீட்சை வினாத்தாழ் அச்சிடும் போது, பகிரும் போது அதனுடன் தொடர்புடைய ஏனைள சந்தர்ப்பங்களில் பரீட்சை நடாத்தும் முன்னர் வினாத்தாழ் மற்றும் அங்கீகார விடைத் தாழ் வெளியாதல் மீளாய்வாண்டில் பல சந்தர்ப்பங்களில் இடம்பெற்றிருந்ததுடன் தேசிய மட்டத்தின் பரீட்சை ஒன்றான தரம் 5 புலமைபரிசில் பரீட்சையை நடாத்தும் போது பரீட்சை முடிவடைய முன்னர் வினாத்தாழ் சமூக ஊடகங்களிற்கு விடுவித்தல் மாகாணத்தின் பரீட்சை நிலையமொன்றில் இடம்பெற்றிருந்தது.	இது தொடர்பாக ஆரம்ப புலனாய்வு இடம்பெற்று வருகின்றன.	இது தொடர்பாக உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(கி)	மீளாய்வாண்டில் மாகாண கல்வி திணைக்களக்கம் ரூபா 71,185,440 இற்கு நேரடியாக கொள்வனவு செய்திருந்த 854 அலகு தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மேலும் பிரதான அமைச்சின் செலவின விடயத்தின் ஊடாக மாகாண கல்வி திணைக்களத்திற்கு ரூபா 47.7 மில்லியனிற்கு கொள்வனவு செய்திருந்த நிலையான சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமைக்கு உள்ளடக்கி நாளாதுவரையாக அல்லது நிலையான சொத்து பதிவேட்டிற்கு உட்படுத்தியிருக்கவில்லை.	விரைவில் அந்த பண்டகங்களை எமது திணைக்களத்திற்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	சொத்துக்கள் முகாமைத்துவ முறைமைக்கு உள்ளடக்கி நாளாதுவரையாக பேணிக் கொள்ள வேண்டும்.
(கீ)	திபுலாகல மற்றும் பொலொன்னருவ வலைய அலுவலகங்களில் 14 கணனிக் கூடங்களில் 293 கணனிகள் செயலிழந்து காணப்பட்டன. மாகாண பாடசாலைகளில் செயலிழந்துள்ள கணனிகள் தொடர்பாக தரவு முறைமையினை செயற்படு நிலைக்கு ஆக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கணனிகள் பழையவை ஆகையால் உதிரிப் பாகங்களை தேடிக் கொள்ள கடினதெனவும் சிறிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	தொழில்நுட்ப விடயப் பொறுப்பு பணிப்பாளரினால் கணனிக் கூடங்களை செயற்படு நிலையில் பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(கு)	2015 இன் 01 இலக்க பிள்ளைகள் கட்டாயமாக பாடசாலைக்கு வருகைதரும் கட்டளைகளிற்கு உரியதாக 2016 ஏப்தர் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1963/30 கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியின் 4(4), 4(5)3 அறிவித்தல் பிரகாரம் பாடசாலையை விட்டுச் செல்லும் பிள்ளைகள் தொடர்பான தகவல்களை இனங்கண்டு அடிப்படை எழுத்தறிவற்ற மற்றும் சமூக விரோத நடத்தைகளிற்கு செல்லும் பிள்ளைகளின் அளவை குறைத்துக் கொள்ள பொலொன்னருவ மாவட்டத்தில் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கட்டாய கல்வி கட்டளைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அறிவுருத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தயுள்ள போதும் உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக குழு நியமித்தல் மற்றும் நாளாதுவரையாக்கல் உரியவாறு இடம்பெறவில்லையென அறவிக்கப்பட்டுள்ளது.	கட்டாய கல்வி கட்டளைகளை உரியவாறு நடைமுறைப்படுத்த வேண்டும்.
(கூ)	பெறுகைகள் செயன்முறையில் விலைமணு மதிப்பீடு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் தொழில்நுட்ப அளவுத்திட்டத்திற்கு இணங்கியதாக விலைமணு சமர்ப்பித்திருக்கும் போது மற்றும் விற்பனையின் பின்னரான சேவையை வழங்க பிரதிநிதி ஒருவர் இருக்கும் போது சேலை நிலையமொன்று இல்லையெனக் குறிப்பிட்டு குறைந்தபட்ச விலையை நிராகரித்த காரணத்தால் 02 சந்தர்ப்பங்களில் 135 Smart board கொள்வனவு செய்யும் போது ரூபா 4,050,000 தொகை மற்றும் 207 Desktop Computer கொள்வனவு செய்யும் போது ரூபா 7,890,840 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.	ஆரம்ப விலைமணு பரீட்சிப்பின் போது கோரியுள்ள அளவுத் திட்டம் மற்றம் நிபந்தனைகளை நிறைவு செய்யாத காரணத்தால் விலைமணு நிராகரிக்கப்பட்டுள்ளதென அறவிக்கப்பட்டுள்ளது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

1.5.9 தலைப்பு 620 - மாகாண விவசாய, விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதார மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
மாகாண விவசாய அமைச்சின் வடமத்திய மாகாணத்தினுள் சுமார் 3,000 அளவான நீர்பாசன நீர்த்தேக்கங்கள் காணப்பட்ட போதும் நீர்த்தேக்கங்களிற்காக மீன் விரல்களை விடுவிக்கும் செயற்திட்டத்திற்காக 57 மீனவ சங்கங்களை தெரிவு செய்து 75 சந்தர்ப்பங்களில் 41 குலங்களிற்கு மாத்திரம் மீன் குஞ்சிகள் பொரிக்கப்பட்டிருந்தன. 2024	மீனவ சங்கங்களின் நிதி சக்தியை அதிகரிப்பதற்காக எதிர்காலத்தில் நடவடிககை எடுக்கிறேன்.	நடைமுறை சாத்திய இலக்குகளை கட்ட வேண்டியதுடன், அந்த இலக்குகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆண்டில் ரூபா 7,223,038 தொகை செலவில் மீன் விரல்களை விடுவித்திருந்ததானது வருடாந்த எதிர்பார்த்த இலக்கின் 48 சதவீதம் வமாத்திரமே.

1.5.10 தலைப்பு 622 - மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2021 ஆண்டில் ரூபா 14,472,387 செலவில் கால்நடை பண்ணை தகவல் மற்றும் தரவு முகாமைத்துவ முறைமையை நிறுவியிருந்த போதும் மாகாணத்தினுள் செயற்படு மட்டத்தில் காணப்படும் 19,267 பண்ணைகளில் 12,221 பண்ணைகளின் தரவுகள் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தரவுகளை தகவல் முறைமைக்கு உட்படுத்தி நிறைவு செய்திருக்கவில்லை.	இற்காக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய வசதிகள் கிடைக்குமென எதிர்பார்க்கிறேன்.	சாத்தியப்பாட்டு ஆய்வொன்றினை மேற்கொண்டு மேற்குறித்த முறைமையை நிறுவுவதற்கான செலவுகளுடன் ஒப்பிட்டு மேற்குறித்த முறைமையை பெற்றுக் கொள்ள, அவ்வாறு மேற்குறித்த முறைமையை நிறுவிய பின்னர் நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	வடமத்திய மாகாணத்தினுள் கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நோக்கமான போதும், 2021 ஆண்டில் பதிவு செய்த 45,399 ஆன கால்நடை பண்ணைகள் காணப்பட்ட போதும், 2024 வரை அவை 26,132 கால்நடை பண்ணைகளாக குறைந்துள்ளதில் கால்நடை பண்ணைகள் 57 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதன் மீது கால்நடை உற்பத்தி மேம்படுத்தலொன்று இடம்பெறவில்லை என அவதானிக்கப்பட்டது.	சரியான பண்ணைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதனை உறுதி செய்ய முடியாததுடன் இதற்காக பண்ணைகள் மதிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.	கால்நடை பண்ணைகள் தொடர்பான சரியான தரவுகளை பேணிக் கொண்டு மாகாணத்தில் கால்நடை தொகையை அதிகரிக்க வேண்டும்.

1.5.11 தலைப்பு 630 - மாகாண சுகாதார, தேசிய மருத்துவ, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் குழந்தை பாதுகாப்பு சேவை, சுற்றாடல் மற்றும் மாகாண சபை நடவடிக்கைகள் அமைச்சு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வடமத்திய மாகாண சுகாதார அமைச்சு, சமூக சேவைகள் திணைக்களம், நன்நடத்தை மற்றும் குழந்தை பாதுகாப்பு திணைக்களம் மற்றும் ஆயர்வேத திணைகளம் ஆகிய நிறுவனங்களிற்குரிய 40 நிகழ்வுகள் தொடர்பாக ஆரம்ப புலனாய்வு சபைகள் நியமிக்கப்பட்டு 2025 ஆகஸ்ட் 30 திகதி வரை 06 மாதங்கள் மற்றும் 12 வருடங்களிற்கு இடையிலான காலம் கடந்துள்ள பொதும் அந்த நடவடிக்கைகளை நிறைவு செய்து அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை.	பதில் கிடைக்கவில்லை.	ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் முறையான அங்கீகாரமின்றி வெளிநாடு சென்றது தொடர்பாக தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து ஒரு மாதத்தினுள் ஆரம்ப புலனாய்வினை நடாத்தி ஒழுகாற்று நடவடிக்கை மேற்கொள்வதற்காக குறித்த புலனாய்வு அறிக்கை மற்றும் வரைவு குற்றப் பத்திரத்தை சமர்ப்பித்து ஓராண்டிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும் சுகாதார அமைச்சின் செயலாளரினால் அரச சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதில் கிடைக்கவில்லை.	ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு முன்நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1.5.12 தலைப்பு 631 – மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொலொன்னருவ பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் 44 வாகனங்களிற்காக இலக்கம் 30/2016 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் 03.1 பிரகாரம் ஆண்டு 01 இற்கும் 07 இற்கும் இடையிலான காலம் கடந்துள்ளதால் எரிபொருள் பரீட்சிப்பை மேற்கொண்டிருக்கவில்லை.	எஞ்சிய வாகனங்களின் எரிபொருள் பரீட்சிப்பை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.	சுற்றறக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	இலக்கம் 09/2009 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின 2(iv) பந்தி பிரகாரம் விரல் அடையாள இயந்திரம் மூலம் வரவு மற்றும் வெளிச்செல்லலை உறுதி செய்து கொள்ளாது மீளாய்வாண்டில் மாகாணத்தின் 02 பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களின் மூலம் ரூபா 1,677,255,654 தொகை மேலதி நேர படிகளாக செலுத்தப்பட்டிருந்தது.	2024 சனவரி புதிய இயந்திரங்களை கொள்வனவு செய்த போதும் அவ்வியந்திரங்களில் தவறு காணப்படுவதால் அந்த தவறுகளை சரிசெய்து பயன்படுத்த முடியும்.	விரல் அடையாள இயந்திரம் மூலம் வரவு மற்றும் வெளிச்செல்லலை உறுதி செய்து கொள்வதன் மூலம் மாத்திரம் மேலதிக நேர படிகளை செலுத்த வேண்டும்.
(இ)	பிரதான செயலாளரின் 2024 ஜுலை 24 திகதிய இலக்கம் 2024/08 கொண்ட திறைசேரி சுற்றறிக்கையின் அட்டவணை இலக்கம் 01 இன் பிரகாரம் போட்டி விலைமனு கோரும் முறைமையின் பிரகாரம் பண்டங்களை கொள்வனவு செய்ய பிராந்திய பெறுகைகள் குழுவிற்கான அங்கீகார அதிகார எல்லை ரூபா 7.5 மில்லியன் ஆன போதும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் ரூபா 8.9 மில்லின் பெறுமதியான 57 வாயு பதனாக்கிகளை கொள்வனவு செய்யும் போது அந்த அதிகார எல்லையை விஞ்சி செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு அந்த எதிகார எல்லையை கவனத்திற் கொள்ளாது மீளாய்வாண்டினுள் ரூபா 8.75 மில்லியன் செலவிட்டு வாகன சில்லுகளை கொள்வனவு செய்திருந்தது.	பிராந்திய பெறுகைகள் குழுவின் அங்கீகார எல்லையை விஞ்சி பெறுகைகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.	சுற்றறக்கை ஏற்பாடுகள் பிரகாரம் அதிகார எல்லையினுள் கொள்வனவு செய்ய வேண்டும்.
(ஈ)	2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவன பதிவு செய்யும் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவன ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை மூலம் ஈட்டும் கட்டண வருமானத்தின் 50 சதவீதத்தை தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையினால் மாகாண சபைக்கு பணம் அனுப்பப்பட வேண்டிய போதும், 2021 ஆண்டு வரையான ரூபா 1,452,950 தொகையை தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையினால் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலவலகத்திற்கு பணம் அனுப்பியிருந்ததுடன். அந்த ரூபா 1,452,950 தொகையை மாகாண சபைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ரூபா 1,452,950 தொகையை மாகாண திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன்.	இத் தொகையை மாகாண சபைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	இலங்கையில் ஆரம்ப சுகாதார சேவையின் தரத்தை மேம்படுத்துதல் அதாவது, வாழ்நாள் முழுவது விரிவான, மேம்பாடு, பாதுகாப்பு, தடுத்தல், நோய் நிவாரணம்,	பதில் வழங்கப்படவில்லை.	செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள

	மறுசீரமைப்பு மற்றும் நோய் சிகிச்சை மூலம் மக்களின் சுகாதார தேவைப்பாட்டை நிறைவு செய்தவதனை போன்றே தொற்றா நோய் ஆபாயத்திலுள்ள பிரசைகளை இனங்கண்டு அந்த நோய்களை கட்டுப்படுத்தல் மற்றும் முகாமை செய்யும் நோக்கில் உலக வங்கி உதவியின் கீழ் 2019 ஆண்டில் ஆரம்ப சுகாதார சேவையை மேம்படுத்தும் செயற்திட்டத்தை ஆரம்பித்த போதும், அந்த நோக்கங்களிற்கு மாற்றமாக 2019 ஆண்டு முதல் 2024 ஜுலை 31 திகதி வரை இந்த செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த நிதிஏற்பாட்டினால் ரூபா 335,691,431 தொகை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏழு மாடி புதிய நிர்வாக கட்டடிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிட்டிருந்ததுடன் ரூபா 51,609,432 தொகை அக்கட்டிடத்திற்கு உபகரணங்களை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.		நடவடிக்கை எடுக்க வேண்டும.
(ஊ)	சிறுநீரக நோய் நிவாரண தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் ரூபா 500 மில்லியன் கிரயத்தில் மெத்சிரசெவன சிறுநீரக நோய் உதவி சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை நிர்மாணித்து 2019 மார்ச் 20 திகதி பொது உடமையாக்கப்படிருந்த போதும் இதுவரை உரிமையை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு கைளித்திருக்காததுடன் கட்டிடத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டிருந்தது.	இக்கட்டிடம் தொடர்பாக குறித்துரைத்த முடிவேதும் இதுவரை வழங்கப்படவில்லை.	இக் கட்டிடத்தின் உரிமை தொடர்பாக காணப்படும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.
